# கடிதமா? வேண்டாம்

அன்று சனிக்கிழமையாதலால் பிற்பகல் இரண்டு மணியோடு பேங்க் முடிந்துவிட்டது. ஏ. ஸி. செய்த ஆபீஸ் கட்டிடத்தை விட்டு வெளியில் வந்த பிறகுதான் வெய்யிலின் கடுமை நளினிக்கு உறைத்தது. 'அடேயப்பா, ஆகஸ்ட் மாதத்தில்கூட இந்த வெய்யில் கொளுத்துகிறதே' என நினைத்துக்கொண்டே குடையைப் பிரித்தாள். பஸ்ஸைப் பிடித்து வீடு வந்துசேரும்போது மணி மூன்று. உள்ளே நுழைந்ததும் 'அம்மா இன்று லெட்டர் ஏதாவது வந்ததா?' என்று விசாரித்தாள். 'இப்போது யார் லெட்டர் போடப்போகிறார்கள்? என்றாள் அம்மா.

ஞாயிற்றுக்கிழமையை இருப்புக் கொள்ளாமல் கழித்தாள் நளினி. வானொலியின் நேயர் விருப்பத்திலோ டி. வி. யின் தமிழ் சினிமாவிலோ கூட மனம் செலுத்த முடியவில்லை.

திங்கட்கிழமை பேங்கிலிருந்து திரும்பியதும் நளினி 'அம்மா இன்று ஏதாவது லெட்டர் உண்டா?' என்றாள். அம்மாவுக்கு ஆச்சரியமாக இருந்தது—இப்போது எங்கிருந்து கடிதத்தை இவள் இவ்வளவு ஆவலாக எதிர்பார்க்கிறாள்? இவளுடைய எம்.காம். ரிஸல்ட் கூட போன மாதம் வந்துவிட்டதே!

அம்மா லெட்டர் வரவில்லை என்றதும் நளினியிடமிருந்து ஒரு நிம்மதிப் பெருமூச்சு கிளம்பியது.

அடுத்த மூன்று நான்கு நாட்களும் நளினி ஆபீஸிலிருந்து வந்ததும் 'லெட்டர் வந்ததா?' பல்லவியைப் பாடுவதும் அம்மா 'இல்லை' என்ற அனுபல்லவியைப் பாடுவதுமாகக் கழிந்தது.

அம்மாவுக்கு இப்போது உள்ளூற கவலை தோன்ற ஆரம்பித்தது. லெட்டர் வந்ததா என்று கேட்பதுமில்லாமல் 'வரவில்லை' என்றால் 'அப்பாடா' என்று நிம்மதி அடைகிறாளே! ஏதாவது தப்புத் தண்டாவில் மாட்டிக் கொண்டு வீட்டிற்கு எதுவும் தகவல் வந்துவிடக் கூடாதே என்று தவிக்கிறாளோ? நினைக்கவே நெஞ்சு கலங்கியது அம்மாவிற்கு — அப்படிப்பட்ட பெண் இல்லையே நளினி! இரண்டு வருடமாக பேங்கில் வேலை பார்க்கிறாள். தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பாளே தவிர வம்பு தும்பு எதற்கும் போகமாட்டாளே! அஞ்சல் வழிக் கல்வி மூலமாக எம். காமும் பாஸ் செய்துவிட்டாள், இனிமேல் ஜாதகத்தை எடுக்க வேண்டியதுதான் என்று நினைத்துக் கொண்டிருக்கும்போது இது என்ன லெட்டர் பூதம்!

பெண்ணிடம் கேட்கவும் தயக்கமாயிருந்தது அம்மாவுக்கு. இருந்தாலும் மனத்தில் ஒரு முடிவுக்கு வந்தாள். நாளைக்கும் நளினி 'லெட்டர் வந்ததா?' என்று கேட்டால் 'எங்கிருந்து லெட்டர் எதிர்பார்க்கிறாய்?' என்று தீர விசாரித்துவிட வேண்டியதுதான் என்று முடிவு செய்து கொண்டாள்.

மறுநாள் நளினி ஆபீஸுக்கு கிளம்பி தெருக்கோடி செல்லும் போதே தபால்காரர் எதிர்ப்பட்டார். தபால்காரரை நளினி நடுங்கும் குரலில் 'நம் வீட்டிற்கு லெட்டர் இருக்கிறதா?' என்று விசாரித்தாள். அவர் இருக்கிறது என்று சொல்லி தேட ஆரம்பித்தவுடன் நளினிக்கு பயத்தில் வியர்த்துக்கொட்டிவிட்டது. அவள் பயந்து கொண்டிருந்த அந்தக் கடிதம் வந்தேவிட்டது.—ஆமாம் பழுப்பு நிற உறைதான். தபால்காரர் கொடுத்த உறையை வாங்கி அங்கேயே நடுங்கும் விரல்களால் பிரித்தாள் நளினி. ஆனால் ஒரு வினாடிதான், கடிதத்தை ஒரு நோட்டம் விட்டவுடனேயே அவள் முகம் மலர்ந்துவிட்டது. உடனே வீட்டிற்கு ஓடி வந்துவிட்டாள், அம்மாவிடம் சேதியைச் சொல்ல.

ஆபீஸுக்குக் கிளம்பிச் சென்ற நளினி கையில் கடிதத்துடன் திரும்பி வந்திருப்பதைக் கண்டு அம்மா திடுக்கிட்டாள்.

'அம்மா, நான் எதிர்பார்த்த கடிதம் வந்துவிட்டது. நான் சி. ஏ. ஐ. ஐ. பி முதல் பார்ட்டில் பாஸ் செய்து விட்டேன். எனக்கு ஒரு இன்க்கிரிமெண்ட் கிடைக்கும், என்றாள் நளினி.

அம்மாவிற்கு மகிழ்ச்சி கலந்த ஆச்சரியம். 'ஆமாம், நளினி முந்தாநாளும் நேற்றும் நான் லெட்டர் வரவில்லை என்று சொன்னதும் நீ 'நல்லவேளை' என்று சொல்லிக் கொண்டே இருந்தாயே, அதற்கு என்ன காரணம்?' என்று வினவினாள் அம்மா.



'அதுவா அம்மா' என்று சிரித்தாள் நளினி. 'இந்த ரிஸல்ட் பத்து நாட்களாக வந்து கொண்டிருக்கிறது. சி.ஏ.ஐ.ஐ.பி. பரீட்சைகளில் ஃபெயில் ஆகிறவர்களுக்கெல்லாம் முதலில் ரிஸல்ட் வந்துவிடும். எல்லாப் பேப்பர்களிலும் பாஸ் செய்து சர்ட்டிபிகேட் பெறுகிறவர்களுக்குக் கடைசியில்தான் ரிஸல்ட் வரும். இந்தக் கடிதம் முன்பே வந்திருந்தால் நான் ஃபெயிலான செய்தியைத்தானே கொண்டு வருவேன். அதனால்தான் இது தாமதமாக வரவேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன்;' என விளக்கினாள் நளினி.

தான் என்னவோ கற்பனை செய்து கொண்டு பயந்ததை எண்ணி அம்மாவும் சிரித்தாள்.

லலிதா சீதாராமன்
பொருளாதார திட்டப்பிரிவு,
மத்திய அலுவலகம்